# சமூகப் பிரச்சினைகளை ஆராயப் புதிய நிலையம்

மக்கள் தொகை, தொழில்நுட்பம், சமூக எதிர்பார்ப்புகள் ஆகிய மூன்று முக்கிய மாற்றங்களால் சிங்கப்பூர் சமுதாயம் வடிவமைக் கப்படுவதாக ஒய்வுபெற்ற கௌரவ மூத்த அமைச்சர் கோ சோக் டோங் நேற்றுக் கூறினார்.

சுற்றுப்புறங்களில் ஏற்படும் மாற்றங்களைப் போலவே இந்தச் சமுதாயத்திலும் கண்ணுக்குப் புலப்படாத மாற்றங்கள் ஏற்படும்; அவற்றின் விளைவுகளை நீண்ட காலத்துக்குப் பிறகு, மீட்டுக் கொள்ள முடியாத மாற்றங்கள் ஏற்பட்ட பிறகே அதைப்பார்க்க முடியும் எனத் திரு கோ குறிப்பிட் டார். சமூகப் பிரச்சினைகள், சமூகச் சேவைகள் போன்றவை குறித்து சிறப்பு ஆய்வு மேற்கொள் வதற்கான புதிய நிலையத்தை சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தில் திறந்து வைத்தபோது அவர் இவ்வாறு பேசினார்.

சமூகத் திட்டங்கள், சேவை களை உருவாக்கி பரிசோதிப்பதில் இந்த ஆய்வு நிலையம் கொள்கை வகுப்பவர்கள், சமூக சேவை முகவைகள் ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றும்.

“அடுத்த 50 ஆண்டுகளில் சிங்கப்பூரர்கள் எதிர்நோக்கவிருக் கும் சமூகச் சவால்கள் கடந்த 50 ஆண்டுகளில் இருந்ததிலிருந்து மிகவும் மாறுபட்டிருக்கும்,” என்று கூறிய திரு கோ, அது குறித்து சிங்கப்பூர் முன்னதாகவே யோசிக்க வேண்டும் என்றார்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகச் சமூகப் பணித் துறையைச் சேர்ந்த பேராசிரியர் பால் செவுங், இணைப் பேராசிரியர் ஐரின் இங் ஆகியோர் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக சமூக சேவை ஆய்வு நிலையத்தை வழிநடத்துவர்.

அடுத்த மூன்று ஆண்டு களுக்கு குறைந்த வருமான ஊழியர்கள் குறித்து இந்த நிலயம் கவனம் செலுத்தும்.

அடுத்த மாதம் தொடங்கவிருக்கும் ஆய்வில் கடனில் சிக்கியிருக்கும் 1,500 குறைந்த வருமானக் குடும்பங் களைப் பற்றியதாக இருக்கும் அவர்கள் கடன்பட்டதற் கான காரணம் அதன் தாக்கம் குறித்து ஆராயப்படும்.

‘சமூக சேவைகளில் மாற் றங்கள்: புதுமை, மதிப்பீடு, தாக்கம்’ எனும் தலைப்பிலான கலந்துரையாடலும் நேற்று நடத்தப் பட்டது. சுமார் 250 பேர் நேற்றைய நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.